# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# ஒன்பதாம் பத்து

## ஒன்பதாம் திருமொழி - மூவரில்
## திருமாலிருஞ்சோலை 2
## [பிரிவாற்றாது தலைவனை நாடிச் சென்ற தலைவியின் நிலையைக் குறித்துத் தாய் இரங்கிக் கூறிய பாசுரம்]

** மூவரில் முன் முதல்வன் * முழங்கார் கடலுள் கிடந்து *
பூவலர் உந்தி தன்னுள் * புவனம் படைத்து உண்டுமிழ்ந்த **
தேவர்கள் நாயகனைத் * திருமாலிருஞ்சோலை நின்ற *
கோவலர் கோவிந்தனைக் * கொடி ஏர் இடை கூடுங்கொலோ? 1

** புனை வளர் பூம்பொழிலார் * பொன்னி சூழ் அரங்க நகருள்
முனைவனை * மூவுலகும் படைத்த * முதல் மூர்த்தி தன்னை **
சினை வளர் பூம்பொழில் சூழ் * திருமாலிருஞ்சோலை நின்றான் *
கனை கழல் காணுங்கொலோ? * கயற்கண்ணி எம் காரிகையே 2

உண்டு உலகேழினையும் * ஒரு பாலகன் ஆலிலை மேல் *
கண் துயில் கொண்டு உகந்த * கரு மாணிக்க மாமலையை **
திண்திறல் மா கரி சேர் * திருமாலிருஞ்சோலை நின்ற *
அண்டர் தம் கோவினை இன்று * அணுகுங்கொல்? என் ஆயிழையே 3

சிங்கம் அதாய் அவுணன் * திறல் ஆகம் முன் கீண்டுகந்த *
பங்கய மாமலர்க் கண் * பரனை எம் பரஞ்சுடரை **
திங்கள் நன்மாமுகில் சேர் * திருமாலிருஞ்சோலை நின்ற *
நங்கள் பிரானை இன்று * நணுகுங்கொல்? என் நன்னுதலே 4

தானவன் வேள்வி தன்னில் * தனியே குறளாய் நிமிர்ந்து *
வானமும் மண்ணகமும் * அளந்த திரிவிக்கிரமன் **
தேன் அமர் பூம்பொழில் சூழ் * திருமாலிருஞ்சோலை நின்ற *
வானவர் கோனை இன்று * வணங்கித் தொழ வல்லள் கொலோ? 5

** நேசம் இலாதவர்க்கும் * நினையாதவர்க்கும் அரியான் *
வாச மலர்ப் பொழில் சூழ் * வட மாமதுரைப் பிறந்தான் **
தேசம் எல்லாம் வணங்கும் * திருமாலிருஞ்சோலை நின்ற *
கேசவ நம்பி தன்னைக் * கெண்டை ஒண்கண்ணி காணுங்கொலோ? 6

புள்ளினை வாய் பிளந்து * பொரு மா கரி கொம்பொசித்து *
கள்ளச் சகடு உதைத்த * கரு மாணிக்க மாமலையை **
தெள்ளருவி கொழிக்கும் * திருமாலிருஞ்சோலை நின்ற *
வள்ளலை வாணுதலாள் * வணங்கித் தொழ வல்லள் கொலோ? 7

பார்த்தனுக்கு அன்று அருளிப் * பாரதத்து ஒரு தேர் முன் நின்று *
காத்தவன் தன்னை * விண்ணோர் கரு மாணிக்க மாமலையை **
தீர்த்தனைப் பூம்பொழில் சூழ் * திருமாலிருஞ்சோலை நின்ற *
மூர்த்தியைக் கை தொழவும் * முடியுங்கொல்? என் மொய்குழற்கே 8

** வலம்புரி ஆழியனை * வரையார் திரள் தோளன் தன்னை *
புலம்புரி நூலவனைப் * பொழில் வேங்கட வேதியனை **
சிலம்பியல் ஆறுடைய * திருமாலிருஞ்சோலை நின்ற *
நலந்திகழ் நாரணனை * நணுகுங்கொல்? என் நன்னுதலே 9

** தேடற்கு அரியவனைத் * திருமாலிருஞ்சோலை நின்ற *
ஆடல் பறவையனை * அணி ஆயிழை காணும் என்று **
மாடக் கொடி மதிள் சூழ் * மங்கையார் கலிகன்றி சொன்ன **
பாடல் பனுவல் பத்தும் * பயில்வார்க்கு இல்லை பாவங்களே 10

**அடிவரவு:** மூவரில் புனை உண்டு சிங்கமது தானவன் நேஸம் புள்ளினை பார்த்தனுக்கு வலம்புரி தேடற்கு எங்கள்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---